www.kalvikural.com

# அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஒ.மு.எண். 2132/அ3/2013 நாள். 27.06.2013

---

பொருள் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 – அரியலூர் மாவட்டம் – இடையக்குறிச்சி கிராமம் – திரு.எ.வேல்முருகன் – என்பாரால் – தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் – பள்ளிக்கல்வி இயக்குநரிடம் கோரப்பட்ட தகவல்கள் – வழங்கல் – சார்பு.

பார்வை பொதுத்தகவல் அளிக்கும் அலுவலர் மற்றும் பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ஒ.மு.எண் 037087/தபால் பிரிவு /2013 நாள் 07.05.2013.

======

பார்வையில் காணும் செயல்முறைகளில் அறிவுறுத்தியுள்ளதற்கிணங்க அரியலூர் மாவட்டம் இடையக்குறிச்சி கிராமம்– திரு.எ.வேல்முருகன் என்பாரால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 கீழ் கோரப்பட்ட தகவல்கள் இவ்வலுவலகம் வாயிலாக மனுதாரருக்கு கீழ்க்கண்ட விபரப்படி அளிக்கப்படுகிறது.

1. அரசு உயர்நிலை / மேல்நிலை / ஆதிதிராவிடர் / கள்ளர் மற்றும் சீர்மரபினர் / நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் கீழ்கண்ட ஆசிரியர்களின் ( **பணியிடம் உருவாக்கியதன் நோக்கத்தின் அடிப்படையில்** ) **வரையறுக்கப்பட்ட பணி என்ன ?**

அ. தலைமையாசிரியர்

ஆ. முதுகலை ஆசிரியர்

இ. தொழிற்கல்வி ஆசிரியர்/ பயிற்றுநர்

ஈ. கணினி பயிற்றுநர்

உ. பட்டதாரி ஆசிரியர்

ஊ. இடைநிலை ஆசிரியர்

எ.சிறப்பாசிரியர்கள் (உடற்கல்வி,தையல்,இசை,ஓவியம்)

www.kalvikural.com

அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகளில், பணிபுரியும் கீழ்கண்ட ஆசிரியர்களின் வரையறுக்கப்பட்ட பணிவிபரம்

| | | |
|---|---|---|
| (அ) | தலைமை ஆசிரியர் | பள்ளியின் நிர்வாகத்தலைவர் என்ற வகையில், ஆசிரியர்களின் கற்பித்தல் பணிகளை மேற்பார்வையிடல், கற்றல் – கற்பித்தல் பணிகள் தொய்வின்றி நடைபெற மாணவர்– ஆசிரியர்கட்கு– ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளல்– மாணவர்களது ஒழுங்கு கட்டுப்பாடு பேணுதல் உட்பட பள்ளியின் பொது அமைதி காக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளல், மாணவர்கட்குரிய அரசின் நலத்திட்டங்கள் பெற்ற வழங்கல்– ஆசிரியர்கள்/அலுவலகப்பணியாளர்களின் ஊதியம் உள்ளிட்ட பணப்பயன்கள் ஏற்பளிப்பு – அவர்களது – பணிப்பதிவேடு பராமரித்தல் – அலுவலக கடிதப்போக்குவரத்து மற்றும் அரசால் அவ்வப்போது மாணவர்/ஆசிரியர் சார்ந்து அறிவிக்கப்படும் திட்டங்களை செயல்படுத்துதல். |
| (ஆ) | முதுகலை ஆசிரியர்கள் | மேல்நிலை வகுப்புகள் பாட/செயல்முறை வகுப்புகள் போதனை மற்றும் தேவையெழும் நிலையில் தலைமை ஆசிரியரால் ஒதுக்கீடு செய்யப்படும் கீழ் வகுப்புகளின் பாட போதனை மற்றும் பள்ளித்தேர்வுகள் / அரசத்தேர்வுகளில் கண்காணிப்பு/ மதிப்பீட்டுப் பணிகள் மற்றும் மூத்த முதுகலை பட்டதாரி ஆசிரியர்– தலைமை ஆசிரியர் இல்லாத காலத்தில் தலைமை ஆசிரியர் பதவிக்குரிய பொறுப்புகளை கூடுதலாக ஏற்றுச்செயல்படல் மற்றும் மாணவர்கள் கல்வி நலன் பள்ளியின் பொது அமைதிக்கு தலைமையாசிரியருக்கு உறுதுணையாக இருத்தல். |

| | | |
|---|---|---|
| (இ) | தொழிற்கல்வி ஆசிரியர்/பயிற்றுநர் | மேல்நிலை தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் பயிலும் மாணவர்கட்கான, பாட/செயல்முறை பயிற்சி வகுப்புகள் போதனை, பள்ளித்தேர்வுகள் அரசுப்பொதுத்தேர்வுகளில் கண்காணிப்பு/விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் மற்றும் மாணவர்கள் கல்வி நலன் பள்ளியின் பொது அமைதிக்கு தலைமையாசிரியருக்கு உறுதுணையாக இருத்தல். |
| (ஈ) | கணினி பயிற்றுநர் | மேல்நிலைகணினி பாடப்பிரிவு மாணவர்கட்கு கருத்தியல் / செய்முறை பாடபோதனை, அரசு / பள்ளித்தேர்வுகளில் கண்காணிப்பு மற்றும் விடைத்தாள் மதிப்பீடு மற்றும் மாணவர்கள் கல்வி நலன் பள்ளியின் பொது அமைதிக்கு தலைமையாசிரியருக்கு உறுதுணையாக இருத்தல். |

www.kalvikural.com

| | | |
|---|---|---|
| (உ) | பட்டதாரி ஆசிரியர் | 6–10 வகுப்புகட்கான பாடபோதனை, பள்ளி/அரசுத்தேர்வுகளில் கண்காணிப்பு மற்றும் விடைத்தாள் மதிப்பீடு, உயர்நிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பணியில் இல்லாத காலங்களில், அப்பதவிக்குரிய பொறுப்பு மற்றும் கடமைகளை, தேவையெழும் நிலையில் முழு நிதியதிகாரத்துடன் செயல்படுதல் மற்றும் மாணவர்கள் கல்வி நலன் பள்ளியின் பொது அமைதிக்கு தலைமையாசிரியருக்கு உறுதுணையாக இருத்தல். |
| (ஊ) | இடைநிலை ஆசிரியர் | 6–8 வகுப்புகட்கான பாடபோதனை மற்றும் பள்ளி அரசுத்தேர்வுகளில் கண்காணிப்பு பணி மற்றும் பள்ளித்தேர்வுகளில் மதிப்பீட்டுப்பணி மற்றும் மாணவர்கள் கல்வி நலன் பள்ளியின் பொது அமைதிக்கு தலைமையாசிரியருக்கு உறுதுணையாக இருத்தல். |
| (எ) | சிறப்பாசிரியர்கள் ( உடற்கல்வி, தையல், இசை, ஓவியம்) | **1.உடற்கல்வி**<br>மாணவர்கட்கு உடற்கல்வி குறித்து போதனை மற்றும் பயிற்சியளித்தல், பள்ளியின் மாணவர்களிடையே ஒழுங்கு கட்டுப்பாட்டையும் பள்ளியின் பொது அமைதியை காத்தலில் தலைமை ஆசிரியருக்கு உறுதுணையாக அவரது வழிகாட்டுதல்படி செயல்படுதல் மற்றும் மாணவர்கள் கல்வி நலன் பள்ளியின் பொது அமைதிக்கு தலைமையாசிரியருக்கு உறுதுணையாக இருத்தல்.<br>**2.தையல், இசை, ஓவியம்**<br>தலைமை ஆசிரியரால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படும் பாடவேளைகளில் மாணவர்கட்கு தாங்கள் சார்ந்த பாடம் குறித்து போதனை மற்றும் பயிற்சியளித்தல் மற்றும் மாணவர்கள் கல்வி நலன் பள்ளியின் பொது அமைதிக்கு தலைமையாசிரியருக்கு உறுதுணையாக இருத்தல். |

2. **அரசு உயர்நிலை / மேல்நிலை / ஆதிதிராவிடர் / கள்ளர் மற்றும் சீர்மரபினர் / நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் கீழ்கண்ட அமைச்சுப்பணியாளர்களின் ( பணியிடம் உருவாக்கியதன் நோக்கத்தின் அடிப்படையில் ) வரையறுக்கப்பட்ட பணி என்ன ?**

**அ. உதவியாளர்**

**ஆ. இளநிலை உதவியாளர்**

**இ. பதிவு எழுத்தர்**

**ஈ ஆய்வக உதவியாளர்**

**உ. அலுவலக உதவியாளர்**

www.kalvikural.com

**தகவல் 02 அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் கீழ்கண்ட அமைச்சப்பணியாளர்களின் வரையறுக்கப்பட்ட பணி விபரம்**

| | | |
|---|---|---|
| (அ)<br><br>(ஆ) | உதவியாளர்<br><br>இளநிலை உதவியாளர் | அலுவலக கடிதப்போக்குவரத்துகள், ஊதியப்பட்டியல்கள் தயாரித்தல், மாணவர்கட்கான அரசின் நலத்திட்டங்களை பெற்று வழங்க விபரங்கள் தயாரித்தல் மற்றும் இதர புள்ளி விபரங்கள் தயாரித்தல் போன்ற பணிகளை தலைமை ஆசிரியர் வழிகாட்டுதல்படியும், அரசு விதிமுறைகளை பின்பற்றுவதும் உதவியாளர் அல்லது உதவியாளர் இல்லாத பள்ளிகளில் இளநிலை உதவியாளரது பணியாகும். |
| (இ) | பதிவு எழுத்தர் | தபால் அனுப்புதல், வருகைப்பதிவேடு/சேர்க்கைப்பதிவேடு / காலமுறை கட்டணப்பதிவேடு எழுதுதல் மற்றும் தலைமை ஆசிரியரால் இடப்படும் அலுவல் ரீதியான பணிகள் |
| (ஈ) | ஆய்வக உதவியாளர் | பள்ளியின் மொழி/பாட ஆய்வகங்களில், முதுகலை பாட ஆசிரியருக்கு உதவியாகவும், மாணவர்கள் செயல்முறைப்பயிற்சியினை மேற்கொள்ளவும் செய்முறை அரசுப்பொதுத்தேர்வுகளில், செய்முறைப்பயிற்சிக்குரிய தயாரித்தல் பணிகளை மேற்கொள்வதும் பணியாகும். |
| (உ) | அலுவலக உதவியாளர் | தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளி அலுவலகம் சார்ந்து, அலுவல் ரீதியிலான பணிகளை செய்ய, தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர், இளநிலை உதவியாளர் உள்ளிட்டோருக்கு உதவியாக செயல்படுதல். |

3. அரசு உயர்நிலை / மேல்நிலை / ஆதிதிராவிடர் / கள்ளர் மற்றும் சீர்மரபினர் / நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளில் நடைமுறையில் உள்ள

**அலுவலக கடிதப்போக்குவரத்துகள்,**
**ஊதியப்பட்டியல்கள் தயாரித்தல்,**
**பணிப்பதிவேடுகளை பராமரித்தல் ,**
**மாணவர்களுக்கான அரசின் அனைத்து நலத்திட்டங்களை பெற்று வழங்குவது ,**
**கல்வி உதவித்தொகை , மற்றும் இதரப்புள்ளி விவரங்கள் தயாரித்தல்**

போன்ற பணிகள் பள்ளிகளில் பணியாற்றும் **எந்த பணியாளரின் வரையறுக்கப்பட்ட பணியின்கீழ் வருகிறது ?**

தகவல் – 03

மனுதாரர் தெரிவித்துள்ளப்பணிகள், உதவியாளர் அல்லது இளநிலை உதவியாளருக்குரிய வரையறுக்கப்பட்ட பணியாகவும் அதனை நிர்வகிக்கும்பொறுப்பு தலைமை ஆசிரியருடையதாகவும் உள்ளது.

www.kalvikural.com

4. மேற்கண்ட ஆசிரியர்கள் / அமைச்சுப்பணியாளர்களின் வரையறுக்கப்பட்ட பணிகளை செய்யாமல் இருக்கும்போது சம்மந்தப்பட்ட பணியாளர்மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கலாமா ? அரசாணை உள்ளதா ?

தகவல் – 04

ஆசிரியர்கள்/ அரசுப்பணியாளர்களின் வரையறுக்கப்பட்ட பணியினை செய்யாமல் இருக்கும்போது, சம்மந்தப்பட்ட பணியாளர்மீது, அவருக்குரிய பொறுப்பு மற்றும் கடமைகளை நிறைவேற்றத்தவறியதாக குற்றம் சாட்டப்பட்டு, அரசு ஊழியர் நடத்தை விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படலாம்.

5. மேற்கண்ட ஆசிரியர்கள் / அமைச்சுப்பணியாளர்களுக்கு அவர்களுக்கு வரையறுக்கப்படாத பணிகளை செய்யுமாறு உயர் அதிகாரிகளால் நிர்ப்பந்திக்கப்படும்போது செய்ய மறுத்தால் சம்மந்தப்பட்ட பணியாளர் மீது நடவடிக்கை எடுக்க இயலுமா ? அரசாணை உள்ளதா ?

தகவல்–05

அரசு அலுவலுக்கு தொடர்பற்றதாகவுள்ள முற்றிலும் அலுவல் சாராத பணிகளை செய்யுமாறு நிர்பந்திக்கப்படும்போது அதனை மறுப்பதால் சம்பந்தப்பட்ட பணியாளர் மீது நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது.

28/6/13

முதன்மைக் கல்வி அலுவலர்,
அரியலூர்

28/06/13

பெறுதல்

திரு.எ.வேல்முருகன், வழக்கறிஞர், 68, கீழத்தெரு,
இடையக்குறிச்சி – 621 719, அரியலூர் மாவட்டம்.